[1st February 1963

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : தமிழை போதனு மொழி ஆக்குவதில் ஏற்கனவே இருந்து வந்த உற்சாகம் நமது அரசாங்கத்திற்கு வரவரக் குறைந்து வருகிறது என்று மக்கள் அபிப்பிராயம் இருக்கிறதே அது வாஸ்தவமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் இப்போதுதான் சொன்னேன் மூன்று சர்க்கார் கல்லூரிகளில் தமிழ் போதனு மொழியாகக் கொண்ட பிரிவுகள் ஏற்படுத்த சர்வகலாசாலையின் அங்கீகாரம் கோரப்பட்டிருக்கிறது என்று. சென்ற ஆண்டிலே ஒரு கல்லூரியிலும் அந்த மாதிரி ஏற்பாடு செய்யப்படவில்லை. இதை வைத்துக் கொண்டு எந்த அபிப்பிராயம் வேண்டுமானுலும் வைத்துக் கொள்ளலாம்.

திரு. ஜே. மாதா கவுடர் : தமிழ் மொழிபெயர்ப்பு என்று சொல்லி பஸ் ஸ்டாண்ட் என்பதற்கு 'உந்து வண்டி நிலையம்' என்று எழுதியிருக்கிறுர்கள். 'உந்து வண்டி' என்ருல் என்ன என்று புரியாத நிலை இருக்கிறது. இந்த மாதிரி புரியாத நிலையில் பாடப் புத்தகத்திலும் போட்டு இது போன்ற மொழிபெயர்ப்புகளை வைத்து மாணவர்களுக்குக் கஷ்டம் கொடுக்காமல் இருக்க எளிய முறையில் தமிழில் சொல்லிக்கொடுக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பாடப் புத்தகங்களைப் பொருத்த மட்டில், 'உந்து வண்டி' போன்ற வார்த்தைகள் இல்லாமல் இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தும்.

Baby Food Factory

* 34 *Q*.—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Baby Food Factory; and

(*b*) if so, when and where?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (*a*) & (*b*) நீலகிரி மாவட்டத்தில் குழந்தைகளுக்கான பாலுணவு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதன் சாத்தியக்கூறுபற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : அந்தத் தொழிற்சாலை தனியார் துறையிலா அல்லது சர்க்கார் துறையிலா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதுதான் ஒரு அப்ளிகேஷன் வந்திருக்கிறது. அது தனியாரிடமிருந்து வந்திருக்கிறது. அது முடியுமா முடியாதா என்று சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறுர்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டிலே தாய்களுக்கு மிகவும் சந்தோஷச் செய்தி என்று சொன்னுர்கள். அவர்களுடைய சந்தோஷம் பூர்த்தி அடையுமா ?—இப்போது சந்தேக தொனியில் சொல்லுகிறுர்களே.

1st February 1963]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது கனம் அங்கத்தினருடைய துரதிருஷ்டம். சென்ற வருஷத்திலே நமக்கு உதவி செய்வதாக முன்வந்த மேல் நாடுகளில் ஒன்று இன்று உதவி செய்வதில்லை என்று முடிவு செய்து விட்டது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், நீலகிரியில் அமைக்க உத்தேசித்திருக்கும் தொழிற்சாலை எந்த இடத்தில் அமைக்கப்படும் என்று கூற முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்னும் கோழி முட்டையே இடவில்லை. இந்த நேரத்தில் குஞ்சு பொறிப்பது பற்றிப் பேசுவதற்கு இடமில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : குழந்தை உணவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று சர்க்கார் கருதுவதானால், மேல் நாடு முன்வரவில்லை என்றாலும், நம் சர்க்காராவது அதை ஆரம்பிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டைரியிங், அதேபோல மில்க் பவுடர், இதையெல்லாம் செய்ய வேண்டிய டெக்னிக்கல் அஸிஸ்டென்ஸ் மேல் நாட்டிலிருந்து வந்தால்தான் செய்ய முடியும். அந்த விதமான தொழில் நுட்பம் நம்மிடம் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : கனம் அமைச்சர் அவர்களுடைய பதிலில் ஒரு நாடு ஆதரவு கொடுப்பதாகச் சொல்லி கடைசியில் முடியாது என்று சொல்லிவிட்டதாகச் சொன்னார்கள். அப்படி இல்லை என்று சொன்ன நாடு எது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பதில் இல்லை.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : நமது நாட்டில் பால் பற்றாக் குறை இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த நிலையில் டைரி ஃபார்ம் வைக்கவும், பால் பவுடர் தொழிற்சாலை ஏற்படுத்தவும் வசதி இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பால் வசதி குறைவாக இருக்கிற காரணத்தினாலேயே இதை அதிகமாக விஸ்தரிக்க வேண்டும். காரணம் என்ன என்று கேட்டால் பால் வசதி இல்லாத இடங்களுக்குக்கூட பால் பவுடர் அனுப்பி அவர்களுக்கும் பால் கிடைக்க வசதி செய்யவேண்டும். நீலகிரியில் இன்னும் அதிக அளவில் பால் உற்பத்தி செய்ய சாத்தியம் இருக்கிறது. அதை விஸ்தரித்து பால் பவுடர் செய்யவேண்டும் என்பதுதான் சர்க்காருடைய நோக்கம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : வேறு ஏதாவது ஒரு மேல் நாட்டின் உதவி பெற்று இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வழி வகை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் நாம் ஒரு நாட்டிடம் கலந்து ஆலோசித்தோம். அந்த நாடு இப்போது முன் வரவில்லை. வேறு நாடு ஏதாவது உதவி செய்கிறதா என்று

பார்க்கலாம். மாதவரம் பால் பண்ணை சம்பந்தப்பட்ட மட்டில் நியூஸிலண்ட் நாட்டிடம் கொலம்போ ப்ளான் கீழ் உதவி பெறுகிறோம். அதே முறையில் இதைப் பற்றி இன்னும் பரிசீலனை செய்யலாம் என்று நினைக்கிறேன்.

தமிழர் வரலாறு

* 35 **கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் மக்கள் பற்றிய ஆதார பூர்வமான சரித்திரத்தை தொகுத்து வெளியிடச் சர்க்கார் ஏதேனும் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளதா ?

(இ) இந்த சரித்திர நூல் எப்போது வெளியிடப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) & (இ) தமிழ் மக்கள் பற்றிய சரித்திரத்தை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

திரு. கே. ஏ. மதியழகன் : இது நடைமுறையில் வரும்போது இந்தப் பொறுப்பை அண்ணாமலை பல்கலைக் கழகத்திடமோ அல்லது சென்னை பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகிய இரண்டின் கூட்டுப் பொறுப்பிலோ விடவேண்டுமென்ற யோசனையை சர்க்கார் ஏற்றுக் கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கமே இதை கவனிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இதை எடுத்துக் கொள்ளும்போது அங்கத்தினர்கள் தகுந்த யோசனை சொன்னால் அதையும் கவனிக்க ஏற்பாடு செய்யலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த முயற்சி தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முக்கியமான காரணம் நெருக்கடி நிலைமை.

திரு. கே. ஏ. மதியழகன் : ஒரு வேளை பிரிவினைத் தடைச் சட்டத்தினால் 'தமிழ் நாட்டு வரலாறு' நூல் தடை செய்யப்பட வேண்டிய நிலை ஏற்படும் என்று சர்க்கார் அஞ்சுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னுடைய மதிக்கு இது புரியவில்லை. பிரிவினைத் தடைக்கும் தமிழர் வரலாற்றுக்கும் சம்பந்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. சா. கணேசன் : தமிழ்நாட்டு வரலாறு எழுத அடிப்படையாக வேண்டிய கல்வெட்டுகள் செப்புச் சாசனங்கள் இவைகளைத் தொகுத்து இவற்றைக் கால வரம்புப்படி அடுக்கிய பிறகுதான் இதைச் செம்மையாகச் செய்ய சாத்தியப்படும் என்பதை சர்க்கார் நம்புகிறதா? அப்படி நம்பினால் அதற்கு ஏற்ற நெறி முறைகளைக் கடைப்பிடிக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.